# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2015 ஆகஸ்ட்

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2015 பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி முதல் மார்ச் 06 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் நகர எண்ணையும் பாட எண்ணையும் குறிப்பிடும்போது சரியான **நகர எண்ணையும், பாட எண்ணையும்** குறிப்பிடுவதற்கு விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆகக் கூடுதலாக பிரதான பாடங்கள் 03க்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்படும்.

02. **விண்ணப்பப்படிவம்**

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தையே பயன்படுத்த வேண்டும்.

**தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக, பாடசாலையில் இருந்து பாடசாலை விடுகைப் பத்திரத்தைப் பெற்றவர்கள் மட்டுமே தோற்ற முடியும். பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அப்படித் தோற்றினார் என நிரூபிக்கப்படுமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்து செய்து இனி வரும் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.**

2.1 க.பொ.த.(உ.தர)ப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் 2005ஆம் வருடத்திலிருந்து அமுலாக்கப்படும் கல்வி அமைச்சு செயலாளரின் 2005/03 இலக்கமும் 2005.01.27 ஆம் திகதியும் கொண்ட சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்திற்குரிய தேர்ச்சி விருத்தி செயற்றிட்டம், செய்முறைச் சோதனை, பாடச்செயற்றிட்டம் என்பவற்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2.2 இதற்கு முன் பாடசாலைப் பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றியிராத, 2015.01.01 ஆம் திகதியில் 21 வயதுக்கு குறைந்த முதல் முறையாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளும் இதற்கு முன் தாம் தோற்றிய ஒரு பாடத்தையாவது மாற்றி தனிப்பட்ட வகையில் தோற்றும் பரீட்சார்த்திகளும் மேற்கூறிய வேலைத்திட்டத்தின் கீழ் தமக்குரிய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு: முதன் முறையாக தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் இதற்கு முன் பாடசாலைப் பரீட்சார்த்தியாக விண்ணப்பித்து அனுமதி அட்டை பெற்ற பின் பரீட்சைக்குத் தோற்றாத 21 வயதுக்குட்பட்டவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளத் தேவையில்லை. இவ்விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் தம்வசம் உள்ள அனுமதி அட்டையின் நிழற் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.**

2.3 இங்கு 2.2ஆம் பந்தியில் கூறப்பட்டவாறு அமையும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்திற்காகத் தம்மைப் பதிவு செய்தபோது தமக்கு வழங்கப்பட்ட பதிவு இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

2.4 மேலே 2.2ஆம் பந்தியில் கூறப்பட்டவாறு தாம் இணைக்கப்பட்ட பாடசாலையில் குறித்த செயற்றிட்டங்களையும் செய்முறைகளையும் பூர்த்தி செய்த பின்னர் அதிபரினால் தங்களுக்கு வழங்கப்படும் சான்றிதழின் நிழற்பிரதி ஒன்றை பரீட்சை ஆரம்ப தினத்திற்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கும் ஏனைய பிரதிகளை உரிய மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கும் அனுப்பவும்.

2.5 2014 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ பாடசாலைப் பரீட்சார்த்தியாகவோ தனிப்பட்ட பரீட்சார்த்தியாகவோ ஏதேனும் ஒரு பாடசாலையில் தமது செயற்றிட்டம், செய்முறைச் சோதனைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்து பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் அச்சுட்டெண்ணையும் வருடத்தையும் விண்ணப்பப்படிவத்தின் இல 05 இல் குறிப்பிட வேண்டும்.

2.6 (அ) **(13) பொது ஆங்கிலம்**

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கும் மேலதிகமாகப் பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். **இதற்காகப் பெறப்படும் தரம் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது.** இப்பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த.(உயர்.தர) பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பாடத்தை ஒரு பாடமாக மட்டும் தோற்றுவதற்கும் இடமளிக்கப்படும்.

(ஆ) **(12) பொதுச் சாதாரண பரீட்சை**

எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதிபெறும் எண்ணத்துடன் இருப்பாராயின் அவர் இப்பாடத்தில் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும்.

(இ) பாட இலக்கம் 28,52,53,54,55,56,57,58,59,65,66 ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

2.7 விண்ணப்பதாரிகள் இவ்வறிவுறுத்தலில் காட்டப்பட்டுள்ள DP/AL/2015/5 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 28 செ.மீ X 21 செ.மீ அளவிலான வெள்ளைத்தாளில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும். 01 முதல் 13 வரையான விபரங்கள் தாளின் முதல் பக்கத்திலும் 14 முதல் 16 வரையான விபரங்கள் அதே தாளின் மறு பக்கத்திலும் அமையுமாறு ஒரு தாளிலேயே காட்டப்பட வேண்டும். **விண்ணப்பப்படிவம் 2015.03.06 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், த.பெ 1503, கொழும்பு** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

2.8 இறுதித் திகதிக்கு முன் பற்றுச்சீட்டைப் பெற்றிருப்பினும் இறுதித் தினத்திற்கு பின் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.

2.9 **ஒரு விண்ணப்பதாரிக்காக ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பினால் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

03. ஒரு உறையினுள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் இட்டு அனுப்ப வேண்டும். **அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை 2015 - ஆகஸ்ட் நகர எண் மற்றும் நகரம் ...........**" இக்கோட்டில் தெரிவு செய்த நகர எண்ணையும் நகரத்தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

04. வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட அச்சிடப்பட்டுள்ள படிவங்களை இதற்காகப் பயன்படுத்துவதாயின் இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள பாட இலக்கங்கள், நகர இலக்கங்களுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள ஏனைய சகல விபரங்களும் ஒத்ததாக இருத்தல் அவசியம். அத்துடன் பிற நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் உள்ள பாட இலக்கங்கள், நகர இலக்கங்கள் என்பவற்றிலுள்ள தவறான தகவல்களுக்கான பொறுப்பை இத்திணைக்களம் ஏற்காது என்பதுடன் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையான இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பபடிவத்திற்கு ஏற்ப இங்கு தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு பரீட்சைக்கு விண்ணப்பிப்பது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

05. இப் பரீட்சை ஒழுங்கமைப்பைச் செய்யும் பொருட்டு கணனி இயந்திரத்தை உபயோகப்படுத்துவதால் நீங்கள் தெரிவு செய்யும் பாடத்தின் பாட **எண்ணும்** தெரிவு செய்யும் நகரமும் நகர **எண்ணும்** மிக முக்கியமானது. ஆதலால் **விண்ணப்பப்படிவத்தை தபாலில் சேர்ப்பதற்கு முன்னர் மிகவும் கவனமாக மீண்டும் ஒரு முறை வாசித்து அவற்றில் எழுதப்பட்டுள்ள இலக்கங்களையும் மற்றும் விபரங்களையும் சரி பார்ப்பதுடன், இன்னொருவரைக் கொண்டு பரீட்சித்துப் பார்த்தல் மிக முக்கியமானதாகும்.**

**எக்காரணத்துக்காகவேனும் பரீட்சை நிலையமோ, விண்ணப்பித்த பாடமோ, மொழி மூலமோ பின்னர் மாற்றப்படமாட்டாது என்பதால் உமது விண்ணப்பப்படிவத்தை எப்பிழையுமின்றி பூரணப்படுத்த வேண்டும்.**

06 உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்கள் தொடர்பாக ஏதாவது அறிந்து கொள்ள வேண்டுமாயின் உங்களின் அனுமதி அட்டை கிடைத்தவுடனே அவ் அனுமதி அட்டையை எடுத்துக் கொண்டு பரீட்சைத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு சமூகம் தரவேண்டும்.

07. **ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். தாம் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை அனுப்பியவுடன், தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

08. இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும்/ கட்டணம் அறவிடும் / அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும் / அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

**குறிப்பு:** செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்படமாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாத்தாளுக்கும் தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டும், பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (Attempt) செல்லுபடியற்றதாகிவிடாது. பரீட்சைக்குத் தோற்றாமையை உறுதிப்படுத்துவதற்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படமாட்டாது. எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாக விண்ணப்பதாரி பாதுகாக்கக்கூடியது பரீட்சை அனுமதிப்பத்திரம் மாத்திரமே ஆகும்.

டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

தொடர்பு எண் : 6/3/AL/2015
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
த.பெ.1503, கொழும்பு.
2015.02.02

T/THADSI/AL/2015 AL/PAPER NOTICE.indd

DP/AL/2015/5

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.தர)ப் பரீட்சை - 2015 ஆகஸ்ட்
## தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

(இவ்விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன் இத்துடனுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்)
இப்படிவத்தைச் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்துக.

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

01. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த மாவட்டம் :

தெரிவு செய்த நகரமும் நகர எண்ணும் : ............ நகர எண்

02. முழுப்பெயர் : **(முதலெழுத்துக்களுடன் மாத்திரம் பெயர் குறிப்பிடுவதைத் தவிர்க்கவும்)**
(i) ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் : ..................................................
..................................................
(ii) சிங்களத்தில் / தமிழில் : ..................................................
..................................................

03. முகவரியும் தொலைபேசி இலக்கமும் : தொ. இல :

(i) ஆங்கிலத்தில் (கெப்பிற்றல் எழுத்துக்களில்)
..................................................
..................................................
..................................................

(ii) சிங்களத்தில் / தமிழில்
..................................................
..................................................
..................................................

04. (i) பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

(ii) 2015.01.01 ஆந் திகதிக்கு : வருடம் மாதம் நாள்

05. 2015 ஆம் வருடத்திற்கு முன் செயற்றிட்டம், செய்முறைச்சோதனைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்து க.பொ.த.(உ.தர)ப் பரீட்சைக்கு தோற்றியிருப்பின் தோற்றிய வருடமும் பரீட்சைச் சுட்டெண்ணும் :

தோற்றிய வருடம் சுட்டெண்

06. மொழி மூலம் : சிங்களம் 2 தமிழ் 3 ஆங்கிலம் 4

07. 2015 ஆம் ஆண்டில் பரீட்சைக்கு தோற்றும் பாடங்கள், மொழிமூலம், பாட எண்கள் : (நன்கு சரிபார்த்து சரியாகக் குறிப்பிடவும்) இரண்டு மொழிமூலங்களில் தோற்றுவதாயின் மட்டும் ஒவ்வொரு மொழிமூலத்தையும் உரிய கூட்டினுள்ளும் குறிப்பிடுக. அன்றேல் அக்கூடுகளை வெறுமையாக விடவும்.

| பாடம் | மொழி | பாட எண் |
|---|---|---|
| i. .................................... | | |
| ii. .................................... | | |
| iii. .................................... | | |
| iv பொதுச் சாதாரண பரீட்சை | | |
| v. பொது ஆங்கிலம் | | |

iv,v காட்டப்படும் பாடங்களுக்குத் தோற்றுவதாயின் மட்டும் கூட்டினுள் பாட எண்களை எழுதுக.

08. விண்ணப்பிக்கும் பாடங்களின் எண்ணிக்கை :

09. தேசிய அடையாள அட்டை :
**(தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை உரிய கூட்டில் ஒட்டவும்.)**

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா : .................................................. **(எழுத்தில்)** **(எண்ணில்)**

11. ஆண் / பெண் : ஆண் 0 பெண் 1

12. தோற்றுகின்ற தடவை :

13. 21வயதுக்கு குறைந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான மாற்று வேலைத் திட்டத்திற்காகப் பதிவு செய்யப்பட்டிருப்பின் பதிவு செய்த இல :

பதிவு செய்த மாகாணக் கல்வித் திணைக்களம் : ..................................................

14. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பதாரி எனது கிராமசேவகர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தில் உள்ளவரென்றும் 01,02,03 மற்றும் 08 ஆம் கூடுகளில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உரிய ஆவணங்களின்படி சரியானவையென்றும் இவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன். இவரது ஆட்பதிவுத்திணைக்களத்தால் வழங்கப்பட்ட முறையான ஆளடையாள அட்டையையும் அதன் நிழற்பிரதியையும் பரீசிலித்தேன். என்னிடமுள்ள ஆவணங்களின்படி இவை சரியாக உள்ளன. இவ் நிழற்பிரதி விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் ஒட்டப்பட்டுள்ளது.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

...........................................
கிராம அலுவலரின் கையொப்பம்
பெயர் : ..........................................................................
(பதவி முத்திரை)

கிராம அலுவலரின் பிரிவும் அதன் இலக்கமும் .............
முகவரி : .......................................................................
.......................................................................
திகதி : ....................

15. ............................... திகதியுடைய பற்றுச்சீட்டு ................................என்னும் இலக்கத்தின் கீழ் ............... ........................................... அஞ்சல் / உபஅஞ்சல் அலுவலகத்தில் ரூபா ............................................ (எழுத்தில்) [ ] (இலக்கத்தில்) செலுத்தப்பட்டது என உறுதிப்படுத்துகிறேன்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் | 100/- | 200/- | 250/- | 300/- | 350/- |

அஞ்சல் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இவ்விடத்தில் நன்றாக ஒட்டவும். அதன் நிழற்பிரதியை உங்களிடம் வைத்துக் கொள்ளுங்கள். (ஆகக்குறைந்தது பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் எண்ணையும் திகதியையும் அஞ்சல் அலுவலகத்தின் பெயரையும் பத்திரமாக வைத்திருத்தல் வேண்டும்.)

பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டி அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

16. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று

.......................................................................
..............................................எனும் முகவரியில்
வசிக்கும்...................................... ஆகிய நான்
(பெயர்)

இப்படிவத்தில் கூறப்பட்டுள்ள (1) சகல விபரங்களும் தகவல்களும் உண்மையும் சரியானதென்றும் (2) இப் பரீட்சை சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களுக்கும், பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகளுக்கும் இணங்குகின்றேன் எனவும் (3) நான் வேறு விண்ணப்பங்களை அனுப்பவில்லை என்றும் (4) இப்பரீட்சைக்குரிய கட்டணத்தை செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்துள்ளேன் என்றும் (5) இப் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைந்து நடக்கவும், கட்டுப்படவும் ஒத்துக் கொள்கின்றேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் : ..................
திகதி : ..................

**தேசிய அடையாள அட்டையின் பிரதியை இங்கே ஒட்டவும்.**

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2015 ஆகஸ்ட்
## விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்துவதற்குரிய விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்

இல 01 : தெரிவு செய்யும் மாவட்டம், நகரம், நகர எண் :

நீங்கள் பரீட்சைக்கு தெரிவுசெய்த மாவட்டத்தைக் குறிப்பிடவும். இப் பரீட்சை நடைபெறும் நகர எண்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அதுபற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற எண்ணியுள்ள நகரத்தையும் உரிய நகர எண்ணையும் தெரிவு செய்து குறித்த அடைப்பினுள் குறிப்பிட வேண்டும். உங்களால் பிழையான நகரஎண் குறிப்பிடப்பட்டிருப்பின் மிகத்தூரத்திலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுமதிக்கப்படும் வாய்ப்பு உண்டு. நகரங்களும், நகர எண்களும் உள்ளடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இல 02 : i. முழுப்பெயரை ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதுதல் வேண்டும். முதலெழுத்துக்களுடன் மாத்திரம் பெயர் குறிப்பிட வேண்டாம்.

**உதாரணம் : SUBRAMANIAM JESINTHA**

ii. முழுப்பெயரை தமிழில் எழுதுக.

**உதாரணம் : சுப்பிரமணியம் ஜெசிந்தா**

இல 03 : முகவரி (i) இல் ஆங்கிலத்திலும், (ii) இல் தமிழிலும் எழுதுக.

இங்கு நிரந்தர முகவரியைக் குறிப்பிடவும். எக்காரணம் கொண்டும் தற்கால வதிவிட முகவரியைக் குறிப்பிட வேண்டாம். உமது தொலைபேசி இலக்கத்தினை அதற்குரிய கூட்டினுள் எழுதுக.

இல 04 : பிறப்புச் சான்றிதழின்படி பிறந்த திகதியை எழுதவும்.

இல 05 : 2015 ஆம் ஆண்டிற்கு முன் செயற்றிட்டம், செய்முறைச் சோதனைகள் என்பவற்றைப் பூர்த்திசெய்து க.பொ.த.(உ.தர)ப் பரீட்சைக்கு இறுதியாகத் தோற்றிய வருடத்தையும் சுட்டெண்ணையும் குறிப்பிடுக.

இல 06 : மொழி மூலம் : தோற்றுவதற்கான மொழிமூலம் தொடர்பாக உரிய கூட்டில் புள்ளடி (X) இடவும்.

உ-ம் :-

| 2 | 3 (X) | 4 |
|---|---|---|
| (சிங்களம்) | (தமிழ்) | (ஆங்கிலம்) |

இல 07 : 2015 ஆம் ஆண்டு பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடங்களும் ஊடகமொழியும்

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2009/16 மற்றும் 2009/16(i) உடைய சுற்றுநிருபத்திற்கும் அதன் திருத்தங்களுக்கும் அமைவாகப் பாடத்தைத் தெரிவு செய்ய வேண்டும். அச்சுற்று நிருபத்திற்கு முரணாகப் பாடங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு திணைக்களம் பொறுப்பில்லை என்பதைக் கவனத்திற் கொள்ளவும். பரீட்சார்த்திகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள அறிவித்தலிலுள்ள பாடப்பட்டியலிலிருந்து தமது பாடங்களைத் தெரிவுசெய்ய முடியும். இப்பரீட்சைக்கு ஆகக் கூடுதலாக மூன்று பிரதான பாடங்களைத் தெரிவு செய்வதுடன், **பல்கலைக்கழகப் பிரவேசத்தை எதிர்பார்த்து விண்ணப்பிப்பதாயின் பொதுச் சாதாரண பரீட்சைக்கும் தோற்றி சித்தி அடைதல் வேண்டும்.** மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கு மேலதிகமாக பாட எண் 13 சாதாரண ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

**முக்கியம்: ஒவ்வொரு பாடத்திற்கும் தோற்றுகின்ற மொழி மூலத்தைக் குறிப்பிடும்போது சிங்களம் எனின் 2 என்றும், தமிழ் எனின் 3 என்றும் ஆங்கிலம் எனின் 4 என்றும் உரிய கூட்டினுள் குறிப்பிடுக.**

உதாரணம்:

| பாடம் | மொழி | பாடஎண் |
|---|---|---|
| பௌதிகவியல் | 3 | 01 |
| இரசாயணவியல் | 3 | 02 |
| உயிரியல் | 4 | 09 |
| பொதுச் சாதாரண பரீட்சை | 3 | 12 |
| பொது ஆங்கிலம் | | 13 |

பரீட்சார்த்திகள் ஆகக்கூடியது 05 பாடங்களுக்குத் தோற்ற முடியும்.

மிகமுக்கியம் :

i. பௌதிகவியல் பாடநெறி கற்கவிருக்கும் மாணவர்கள் 07 - கணித பாடத்தைத் தெரிவுசெய்ய முடியாது.

ii. தொழினுட்பப் பாடங்களுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பாட இல 14,15,16,17,18,19 ஆகிய பாடங்களுள் **ஒன்றிற்கு** மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

iii. சமயம் மற்றும் நாகரிகம் ஆகிய பாடங்களில் ஏதாவதொரு சமயத்தினை பரீட்சார்த்தி தெரிவு செய்வாராயின் அதனோடு தொடர்புபட்ட நாகரிகப் பாடத்தினை அவர் தெரிவு செய்ய முடியாது. அதே போன்று நாகரிகப்பாடத்தினை தெரிவு செய்வாராயின் அதனுடன் தொடர்புடைய சமய பாடத்தை தெரிவு செய்ய முடியாது.

iv. 52 நடனபாடத்திற்கு விண்ணப்பிக்கும்போது நீங்கள் கற்ற நடன வகையைக் குறிப்பிடவும். உ - ம் நீங்கள் கற்றது கண்டி நடனம் என்றால் 52A எனவும், தாழ்நாட்டு நடனம் என்றால் 52B எனவும், சப்ரகமுவ நடனம் என்றால் 52C எனவும் குறிப்பிடவும். **இவ்வாறு வகைப்படுத்துவது பிரயோகப் பரீட்சைக்கு மாத்திரம் ஆகும். அனுமதி அட்டையிலும் பெறுபேற்று அட்டவணையிலும் 52 நாட்டியம் (தேசிய) என குறிப்பிடப்படும்.**

v. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் பின்னர் மாற்றம் செய்வதற்கோ அல்லது பரீட்சை மண்டபத்தில் பாட மாற்றங்கள் செய்வதற்கோ அல்லது மேலதிக பாடங்களுக்குத் தோற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது. அவ்வாறு தோற்றியிருப்பின் அப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இரத்துச்செய்யப்பட வேண்டி நேரிடும்.

**பாடப்பட்டியல்**

| பாடம் | பாட எண் | பாடம் | பாட எண் |
|---|---|---|---|
| பௌதிகவியல் | 01 | பௌத்த நாகரிகம் | 45 |
| இரசாயனவியல் | 02 | இந்து நாகரிகம் | 46 |
| கணிதம் | 07 | இஸ்லாமிய நாகரிகம் | 47 |
| விவசாய விஞ்ஞானம் | 08 | கிரேக்க உரோம நாகரிகம் | 48 |
| உயிரியல் | 09 | கிறிஸ்தவ நாகரிகம் | 49 |
| இணைந்த கணிதம் | 10 | சித்திரக்கலை | 51 |
| உயர் கணிதம் | 11 | நடனம் (தேசிய - கண்டி) | 52A |
| ✳ பொது சாதாரண பரீட்சை | 12 | நடனம் (தேசிய - தாழ்நாட்டு) | 52B |
| ✳ பொது ஆங்கிலம் | 13 | நடனம் (தேசிய - சப்ரகமுவ) | 52C |
| குடிசார்த் தொழினுட்பவியல் | 14 | நடனம் (பரதம்) | 53 |
| பொறிமுறைத் தொழினுட்பவியல் | 15 | சங்கீதம் (கீழைத்தேயம்) | 54 |
| மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் | 16 | சங்கீதம் (கர்நாடகம்) | 55 |
| உணவுத் தொழினுட்பவியல் | 17 | சங்கீதம் (மேலைத்தேயம்) | 56 |
| விவசாயத் தொழினுட்பவியல் | 18 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | 57 |
| உயிர் வளத் தொழினுட்பவியல் | 19 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 58 |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் | 20 | நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | 59 |
| பொருளியல் | 21 | பொறியியற் தொழினுட்பவியல் | 65 |
| புவியியல் | 22 | உயிர் முறைமைகள் | 66 |
| அரசியல் விஞ்ஞானம் | 23 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 67 |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | 24 | சிங்களம் | 71 |
| இந்திய வரலாறு | 25A | தமிழ் | 72 |
| ஐரோப்பிய வரலாறு | 25B | ஆங்கிலம் | 73 |
| நவீன உலக வரலாறு | 25C | பாளி | 74 |
| மனைப்பொருளியல் | 28 | சமஸ்கிருதம் | 75 |
| தொடர்பாடல் ஊடகக்கற்கை | 29 | அரபு | 78 |
| வணிகப் புள்ளிவிபரவியல் | 31 | மலாய் | 79 |
| வணிகக்கல்வி | 32 | பிரெஞ்சு | 81 |
| கணக்கீடு | 33 | ஜேர்மன் | 82 |
| பௌத்த சமயம் | 41 | ருசியன் | 83 |
| இந்து சமயம் | 42 | ஹிந்தி | 84 |
| கிறிஸ்தவ சமயம் | 43 | சீன மொழி | 86 |
| இஸ்லாம் | 44 | ஜப்பானிய மொழி | 87 |

✳ பிரதான பாடங்களுக்கு உரித்துடையது அல்ல. தோற்றுவதாயின் மாத்திரம் பாட இலக்கத்தை கூட்டில் எழுதவும்.

இல.08 : விண்ணப்பிக்கும் பாடங்களின் எண்ணிக்கையைத் தெளிவாக இலக்கத்தில் எழுதவும்.

இல.09 : தேசிய அடையாள அட்டையின் எண்ணை எழுதி அத்துடன் நிழற் பிரதியை உரிய கூட்டில் ஒட்டவும். அவ்வாறு தேசியஅடையாள அட்டையின் நிழற் பிரதி ஒட்டப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை கூடிய கவனத்திற் கொள்ளவும்.

இல.10 : செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் சொற்களிலும் இலக்கத்திலும் எழுதுக.

இல.11 : பால் : ஆண் / பெண் என்று குறிப்பிடுவதற்குரிய கூட்டில் "X" புள்ளடி இடவும்.

இல.12 : நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது எத்தனையாவது தடவை என்பதைக் குறிப்பிடவும்.

இல.13 : 21 வயதுக்கு குறைந்த தனிப்பட்ட பரீட்சார்த்திக்குரிய பாடசாலை மட்டக்கணிப்பீட்டிற்கான மாற்றீட்டு வேலைத்திட்டத்திற்காகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாயின் அப்பதிவு இலக்கத்தையும் பதிவு செய்த மாகாணக் கல்வித் திணைக்களத்தையும் குறிப்பிடுக.

இல.14 : **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்:**

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் இருக்கும் கையொப்பத்தை அவர்களது வதிவிடம் அமைந்துள்ள கிராமத்திற்குரிய கிராம அலுவலரால் மாத்திரமே அத்தாட்சிப்படுத்த வேண்டும். அதற்காக தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்பிரதியையும் கொண்டு செல்லல் வேண்டும்.

இல.15 : **செலுத்தப்பட்ட கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் **முத்திரை** அல்லது **காசுக்கட்டளை** மூலம் செலுத்தப்படலாகாது. பரீட்சைக் கட்டணத்திற்கான பணத்தை அருகிலுள்ள அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி அதற்காகப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை 15 ஆவது கூட்டில் ஒட்ட வேண்டும். 2015 பெப்ரவரி 06 ஆம் திகதியிலிருந்து மார்ச் 06ஆம் திகதி வரை மட்டும் நாட்டின் எல்லா அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகங்களிலும் இப் பற்றுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி தபால்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**பரீட்சைக் கட்டண விபரங்கள் கீழ்வருமாறு :**

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் | 100/- | 200/- | 250/- | 300/- | 350/- |

**மனைப்பொருளியல், பொறியியற் தொழினுட்பவியல், உயிர் முறைமைகளுக்கான செய்முறைப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 200/- ஆகும். இக்கட்டணமானது செய்முறைப் பரீட்சைக்கு அழைப்பு வரும்போது மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.**

**செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு :**
பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு கழராத வண்ணம் உரிய கூட்டில் ஒட்டப்படல் வேண்டும்.
**(பற்றுச்சீட்டின் இலக்கமும், திகதியும், பரீட்சார்த்தியினால் குறித்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன் நிழற் பிரதியொன்றைக் கைவசம் வைத்திருத்தல் மிகவும் நல்லது.)**

இல.16 : பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று

மிகவும் கவனமாக வாசித்தறிந்த பின்னர் இங்கு பரீட்சார்த்தி கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

**பார்வை / கேட்டல் வேறு குறைபாடுகளுள்ள** விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் சிவப்பு மையினால் **“பார்வை / கேட்டல் / வேறு குறைபாடுடைய விண்ணப்பதாரி”** என எழுதுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்தை நிராகரித்தல்**

1. இலக்கம் 1 **முதல்** 13 வரையாக உள்ள விடயங்கள் விண்ணப்பப்படிவத்தின் முதற்பக்கத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். **அவ்வாறு தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் அறிவுறுத்தல்களுக்கு அமையாத விண்ணப்பங்களும் குறிப்பிட்ட திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்களும் பரீட்சைக் கட்டணத்தை முத்திரையாக அல்லது காசுக்கட்டளை மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.**

2. பாடசாலையிலிருந்து விலகியவர்கள் மட்டுமே தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாகக் கருதப்படுவர். பாடசாலையில் கற்றுக்கொண்டு, தனிப்பட்ட விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற தடைவிதிக்கப்படுவர்.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2015
## உத்தேச நேரஅட்டவணை

| | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| **1** | 0830 - 1130<br>10 இணைந்த கணிதம் I<br>0830 - 1030<br>65 பொறியியற் தொழினுட்பவியல் I<br>66 உயிர் முறைமைகள் I<br>78 அரபு I | 1230 - 1430<br>09 உயிரியல் I<br>21 பொருளியல் I<br>79 மலாய் I |
| **2** | 0830 - 1030<br>52 நாட்டியம் - தேசிய I<br>53 நாட்டியம் - பரதம் I<br>54 கீழைத்தேய சங்கீதம் I<br>55 கர்நாடக சங்கீதம் I<br>56 மேலைத்தேய சங்கீதம் I<br>0830 - 1130<br>51 சித்திரக்கலை I | 1230 - 1530<br>09 உயிரியல் II<br>21 பொருளியல் II<br>79 மலாய் II |
| **3** | 0830 - 1130<br>10 இணைந்த கணிதம் II<br>52 நாட்டியம் - (தேசிய) II<br>53 நாட்டியம் - (பரதம்) II<br>65 பொறியியற் தொழினுட்பவியல் II<br>66 உயிர் முறைமைகள் II<br>78 அரபு II | 1230 - 1430<br>08 விவசாய விஞ்ஞானம் I<br>48 கிரேக்க, உரோம நாகரிகம் I<br>83 ருசியன் I |
| **4** | 0830 - 1030<br>32 வணிகக் கல்வி I<br>82 ஜேர்மன் I<br>86 சீன மொழி I | 1400 - 1700<br>51 சித்திரக்கலை II<br>54 கீழைத்தேய சங்கீதம் II<br>55 கர்நாடக சங்கீதம் II<br>56 மேலைத்தேய சங்கீதம் II |
| **5** | 0830 - 1030<br>01 பௌதிகவியல் I<br>0830 - 1130<br>32 வணிகக் கல்வி II<br>82 ஜேர்மன் II | 1230 - 1530<br>71 சிங்களம் I<br>72 தமிழ் I |
| **6** | 0830 - 1130<br>08 விவசாய விஞ்ஞானம் II<br>48 கிரேக்க, உரோம நாகரிகம் II<br>83 ருசியன் II<br>86 சீன மொழி II | 1230 - 1430<br>28 மனைப் பொருளியல் I |
| **7** | 0830 - 1130<br>01 பௌதிகவியல் II<br>51 சித்திரக்கலை III | 1230 - 1530<br>71 சிங்களம் II<br>72 தமிழ் II |
| **8** | 0830 - 1030<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் I | 1230 - 1530<br>28 மனைப் பொருளியல் II |
| **9** | 0830 - 1030<br>02 இரசாயனவியல் I<br>67 தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் I<br>75 சமஸ்கிருதம் I<br>81 பிரெஞ்சு I | 1230 - 1530<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் II |
| **10** | 0830 - 1030<br>14 குடிசார் தொழினுட்பவியல் I<br>15 பொறிமுறைத் தொழினுட்பவியல் I<br>16 மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் I<br>17 உணவுத் தொழினுட்பவியல் I<br>18 விவசாயத் தொழினுட்பவியல் I<br>19 உயிர் வளத் தொழினுட்பவியல் I<br>74 பாளி I | 1400 - 1700<br>25A இந்திய வரலாறு II<br>25B ஐரோப்பிய வரலாறு II<br>25C நவீன உலக வரலாறு II |
| **11** | 0830 - 1130<br>02 இரசாயனவியல் II<br>67 தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் II<br>75 சமஸ்கிருதம் II<br>81 பிரெஞ்சு II | 1230 - 1430<br>23 அரசியல் விஞ்ஞானம் I |

| | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| **12** | 0830 - 1130<br>13 பொது ஆங்கிலம் I | 1230 - 1500<br>13 பொது ஆங்கிலம் II |
| **13** | 0830 - 1030<br>41 பௌத்தம் I<br>42 இந்து சமயம் I<br>43 கிறிஸ்தவம் I<br>44 இஸ்லாம் I<br>45 பௌத்த நாகரிகம் I<br>46 இந்து நாகரிகம் I<br>47 இஸ்லாமிய நாகரிகம் I<br>49 கிறிஸ்தவ நாகரிகம் I | 1230 - 1430<br>29 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I |
| **14** | 0830 - 1130<br>73 ஆங்கிலம் I | 1230 - 1530<br>25 இலங்கை வரலாறு I |
| **15** | 0830 - 1130<br>14 குடிசார்த் தொழினுட்பவியல் II<br>15 பொறிமுறைத் தொழினுட்பவியல் II<br>16 மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் II<br>17 உணவுத் தொழினுட்பவியல் II<br>18 விவசாயத் தொழினுட்பவியல் II<br>19 உயிர் வளத் தொழினுட்பவியல் II<br>74 பாளி II | 1230 - 1430<br>22 புவியியல் I |
| **16** | 0830 - 1130<br>23 அரசியல் விஞ்ஞானம் II | 1400 - 1700<br>73 ஆங்கிலம் II |
| **17** | 0830 - 1030<br>33 கணக்கீடு I<br>84 ஹிந்தி I | 1230 - 1530<br>22 புவியியல் II |
| **18** | 0830 - 1130<br>41 பௌத்தம் II<br>42 இந்து சமயம் II<br>43 கிறிஸ்தவம் II<br>44 இஸ்லாம் II<br>45 பௌத்த நாகரிகம் II<br>46 இந்து நாகரிகம் II<br>47 இஸ்லாமிய நாகரிகம் II<br>49 கிறிஸ்தவ நாகரிகம் II | 1230 - 1530<br>29 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II |
| **19** | 0830 - 1130<br>33 கணக்கீடு II<br>84 ஹிந்தி II | 1230 - 1430<br>20 தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் I |
| **20** | 0830 - 1030<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் I<br>0830 - 1130<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) I<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) I | 1230 - 1530<br>07 கணிதம் I<br>11 உயர் கணிதம் I<br>1230 - 1430<br>87 ஜப்பானிய மொழி I |
| **21** | 0830 - 1130<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் II<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) II<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) II | 1230 - 1530<br>07 கணிதம் II<br>11 உயர் கணிதம் II<br>87 ஜப்பானிய மொழி II |
| **22** | 0830 - 1100<br>12 பொதுச் சாதாரணப் பரீட்சை | 1400 - 1700<br>20 தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் II |

கவனிக்க: இப்பரீட்சையின் எப்பாடத்திற்காக கணித்தற்பொறிகளையோ அழிமையையோ (correcting Fluid) உபயோகிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் மண்டபத்தினுள் எடுத்து வருதல் தவறாகும்.

டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

எனது இல 6/3/உ.த/2015
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2015.02.02